உ

கணபதி துணை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"—(திருக்குறள்)

தொகுதி ௧௧. Vol—XI. | காளயுக்தி௵ தைமீ FEBRUARY 1919. | பகுதி ௧. No. 1.

ஸ்ரீ:

"நமது பத்திரிகை."

சென்ற நான்கு வருஷங்களாக நமது பாநுவானது, ஐரோப்பிய மஹாயுத்தங்களுக் கிடையில் தனது புதிய வருஷாரம்பத்தைத் தொடங்கினதுபோ லல்லாமல், உலகம் சாந்தத்தையடைந்து தக்கதொரு ஸர்வதேச ஸமாதானத்தை நாடி, நலம்பெறவிருக்கும் இந்த நற்காலத்தில் தனது பதினொன்றாவது வயதினைத் தொடங்கி யிருக்கின்றது. பெரிய யுத்தம் நடந்தேறி முடிவடைகின்ற காலமாதலால், பல தேசங்களும் தமக்குள் ஒற்றுமையையும் அமைதியையும் நாடிப் பரபரப்புடன் உழைத்துவருகின்றனவாயினும், அநேகமாகப் பெருந் தேசங்களுள் உட் கலகங்கள் உண்டாய்க்கொண்டும் உண்டானவை யடங்காமலு மிருக்கின்றன.

இக்கலக்கமானது, அரசாங்கத்துக்கும் குடிகட்கும் இடையில், அதிகாரி வர்க்கத்தினரிற் சிலர், செய்துகொண்டிருக்கும் தவறுபாட்டினையே காரணமாகக்கொண்டு பிறந்திருக்கின்றது. இவ்விதமான கலக்கத்தில் நமது இந்தியாவும் பெருத்ததொரு பங்கினை வாங்கிக் கொண்டு வருந்துகின்றது. இது காரணமாக நமது இந்தியா இது வரையில் உண்டியையும் உடையையும் அயல் நாட்டாரிடமிருந்து பெற்றுக்கொண்டு பசியையும் பழிப்பையும் அடக்கிக்கொண்டிருந்த துணையும் போய், தானாக ஆக்கிக்கொள்ளவும் வகையற்று, பழைய வழியே கதியெனக்கொண்டு பழைய வெளிச்சத்துடன் வெளிவர்

துலாவப் பார்க்கின்றது. இந்தக் கவலையான காலத்திலேதான் நமது பாநு இந்த வயதினைப் பேணிவர நோக்கங்கொண்டிருக்கின்றது.

கடிதத் துணைக்கும் படித்தாத் துணைக்கும் கவலைப்படும் இக் காலத்தில் நமது பத்திரிகை சிரமத்துடனாயினும் வெளிவந்துலாவப் பிரியப்படுகின்றது. "ஊக்க முடையார் தூக்க மடையார்." ஆகலின் சீக்கிரம் உறுதியைப்பெறுமென்றே நினைக்கின்றோம்.

நமது பாநு, சென்ற வருஷமெல்லாம் தனது பெயருக்கு ஏற்ற வண்ணம் பெரும்பாலும் தலையங்கங்களையெல்லாம், தேசீயக்கல்வி விஷயமாகவே நேயர்களை வற்புறுத்திக்கொண்டு வந்தது. இந்தியாவில் பெரும்பாலாரும் தேசியக்கல்வியின் ஆவசியகத்தை நன்கு உணர்ந்து இருக்கின்றார்கள் என்று நாம் பத்திரிகைகள் வாயிலாக நன்றாய் அறி கின்றோம். இந்தச் சமயத்தில் ஆங்கிலம் படித்த இந்தியத் துரை மக்களுங்கூடத் தேசபாஷையின் அவசியத்தை ஜனங்கட்கு எடுத்துச் சொல்லுவதுமாத்திரமில்லாமல், தாங்களும் தங்கள் கருத்துகளைத் தேசபாஷையிலேயே தெரிவித்துக்கொண்டும் வ ரு கி ன் றா ர் க ள். எனவே நமது தேச பாஷைகட்கு இப்போது நல்லகாலம் திரும்பி யிருக்கின்றது என்றே சொல்லவேண்டும்.

ஒரு நாடு முன்னேற்றம் அடையவேண்டுமானால் அந்தந்த நாட் டின் தாய்ப்பாஷை கவுரவத்தைப் பெற்றுவரவேண்டுமென்பது கட லோசையாகாதன்றே! ஜப்பான் முதலிய இதரநாட்டுச் சரித்திரங்க ளும் இக்கருத்தினையே வற்புறுத்திச் செல்கின்றன.

நமது நாட்டுக் கல்வியபிவிருத்தியைப் பற்றிச் சொல்லப் புகுந் தோமாயின், அரசாங்கத்தாரது உதவியைக்கொண்டு அதிக நன்மை யையடைந்துவிட்டதாக உபசாரமாகச் சொ ல் ல வு ம் உறுதியைக் காணோம். இந்தியாவின் மொத்த வருஷச் செலவுகளில் நா ன் கி ஞெருபாகம் ரா ணுவத்திற் செல்வாகின்றது. ஜெயில் பரிபாலனத்துக் கும் போலீஸ் நிர்வாஹத்திற்குமாக 100-க்கு 10-வீதம் செலவாகின் றது. ஆனால், 100-க்கு நான்கு ரூபாய்களே கல்விவிஷயத்தில் செல விடப்படுகின்றன என்பது நன்றாய் வெளியாகின்றது.

ஆங்கிலத்தைப் பிரதானமாகக்கொண்ட முறையாகிய நவீன முறைக்கே அரசாங்கத்தவரது அருள் நன்கு பெறக்கூடவில்லை யென்றால், தேசபாஷையின் ஏற்றத்தைக் கோரும் முறையாகிய இந்தியக் கல்விமுறைக்கு அவர்களது உதவியை எதிர்பார்த்திருப்பது ஓராற்றிலிறங்க மண்குதிரையின் உதவியை எதிர்பார்ப்பதேயாகும். தேசாபிமானிகளாகிய தேசப்பொதுமக்களே முன்வந்து நின்றாலொழியத் [தே]சியக்கல்விமுறை முன்னேறுமென்று கூசாமல் சொல்லலாகும்.

வாடியா என்பவரின் தர்ம சொத்துக்களைப் பற்றிய அறிக்கை யொன்று சமீபத்தில் படிக்கப்பெற்றபோது, சில குறிப்புகள் காட்டப் பெற்றன. அவை இவையாம், "சென்ற வருஷத்தில் மேற்படியார் சொத்துக்களின் மூலமாய்க் கிடைத்த ஊதியத் தொகையிலிருந்து 3,40,000 ரூபாய் பல தர்மங்கட்குக் கொடுக்கப்பெற்றது. இதில் 1,10,000 ரூபாய் கல்விக்கென்று அர்ப்பணம் செய்யப்பெற்றது. பிச்சைக்காரர்கட்கும் ஏழைகட்குமாகக் கொடுத்ததில் செலவான தொகை 82,000 ரூபாய்."

இதனைக் குறித்துப் பம்பாய்க் கவர்னராகிய ஸர்ஜார்ஜ் லாய்டு என்பவர் தமது அபிப்பிராயத்தைச் சொல்லவந்தபோது தமது உபந்யாசமத்தியில், "காலஞ்சென்ற வாடியாவைப் பின்பற்றிச் சிறுவர்கள் நடக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கடைசியாகச் சொன்னதாவது:—நீங்கள் இந்தியர் என்று சொல்லிக்கொள்வதில் கிரமமாய்ப் பெருமையடைதல்வேண்டும். ஏகாதிபத்தியத்தின் ஓர் உறுப்பைச் சேர்ந்தவர்களாய்ச் சுய ஆட்சியும் சுயேச்சையும்பெற்று விளங்குவதில் நீங்கள் இன்னும் பெருமையடைதலேவேண்டும். நாமனைவரும் சக்கரவர்த்தியின் சேவகர்கள் எனப்பெற்ற ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதை நாம் மறந்துவிடல் கூடாது. நமது தாய்நாடு எதுவாயிருந்தாலுஞ் சரி. அந்த நாட்டினது நன்மைக்கும் நமது சக்கரவர்த்திக்கும் உழைக்கின்றோம் என்னும் உணர்ச்சியுடன் சேவிக்கவேண்டியதே நமது கடமை."

வாடியாவைப் போல அநேகம் பிரபுக்கள் முன்வந்துதவுவார்களானால், வித்யாவிஷயத்தை நல்லதொரு முறையிற் பார்க்கலாகும்.

வித்யாவிஷயத்தில் பலதுறைகளிலும் இறங்கி உதவ முன்வரவேண்டும் இவ்வமயம் மற்றெந்தத் தர்மங்களைக்காட்டிலும் வித்தியா தர்மமே சிறந்ததாகக் கவனிக்கப்படுகின்றது.

சமீபத்தில் காசியில் ஹிந்து யூனிவர்ஸிடியின் கொண்டாட்டம் நடைபெற்றபோது, மைசூர் மஹாராஜா அவர்கள் செய்த பிரசங்கத்தில் சிறந்த விஷயங்கள் கவனிக்கத் தகுந்தவாகச் சொல்லப்பெற்றன. அவைகளுட் சிலவற்றை இங்குக் கூறுவோம்.

"காசியில் ஏற்பட்டுள்ள ஹிந்து யூனிவர்ஸிடியானது பிற்காலத்தில் இந்தியா முழுதும் உள்ளோர் ஆங்குசென்று பயிலக்கூடிய ஒரு மஹா வித்யாசாலையாக மாறிவிடும்."

"1919-ம் வருஷத்தில் இதன் முதலாவது பட்டப் பரிசளிப்பு வைபவம் நடந்தது. 38-பேர் பட்டம்பெற்றனர், அவர்களுள் ஸ்திரீ ஒருவர். இந்தியாவில் 6-யூனிவர்ஸிடிகளே யிருக்கின்றன. ஏனைய தேசங்களிலோ பல யூனிவர்ஸிடிகள் இருக்கின்றன. ஹிந்து யூனிவர்ஸிடியில் சாஸ்திரக் கல்வியை நன்கு போதிக்குமாறு பாடியாலா மஹாராஜா சென்ற வருஷம் 5-லக்ஷம் ரூபாய் கொடுத்தார். ஆயுர்வேதக் கல்வியைப் போதிக்கப் பால தேவ தாஸ் என்னும் மார்வாரிக் கனவான் லக்ஷம் ரூபாய் தர முன்வந்திருக்கின்றனர். மற்றொரு கனவான் ஒன்றரை லக்ஷம் ரூபாய் கொடுத்திருக்கின்றனர். விவசாயக் கல்வியைப் போதிக்க 1200-ஏகர் பூமியைக் காசி மஹாராஜா கொடுக்க உடன்பட்டிருக்கின்றார். யந்திரசாஸ்திரம் விவசாயசாஸ்திரம் இவற்றைப் போதித்தற்குரிய கலாசாலைகளை ஏற்படுத்துதற்குத் திட்டங்கள் தயார்செய்யப்பட்டு வருகின்றன."

மைசூர் மஹாராஜா மாணவர்க்கு நன்மதி கூறியபோது, "மற்றத் தேசங்களோடு சம்பந்தம் வைத்துக்கொள்வதனுலாவது பிறதேசத்து நாகரிகத்தைச் சமயோசிதமாய்ப் பின்பற்றி நடத்தினுலாவது உங்கள் நாட்டுக்குக் கேடும் அவமானமும் வந்துவிடா" என்றும்.

"சர்க்கார் உத்தியோகத்திற்குப் பழக்கிவைப்பதற்கென்றே முற்காலத்தில் ஏற்படுத்தப்பெற்ற முறையாகிய ஆங்கிலக் கல்விமுறை

இக்காலத்தில் பயன்றருவதொன்றன்று. ஸர்க்கார் உத்தியோகம் மோட்சபதவியாகுமென்று பட்டதாரிகள் இனி நினைத்துவிடுதல் கூடாது. அளவுகடந்து நடவாமல் சட்டத்திற்கடங்கிச் சாஸ்திரஞானத்தையும் மதப்பற்றையும் துணையாகக்கொண்டு பட்டதாரிகளாகிய நீங்கள் உங்கள் வாழ்வில் பெருமையடைவீர்களாக" என்றும் கூறியிருக்கின்றனர்.

பத்திராதிபர்.

ஸ்ரீ:

பிரம்மோத்ஸவம் அல்லது ஸகுணோபாஸனை.

முன்னுரை.

இந்து நண்பர்களே!

நாம் இந்தியாவிலே பிறந்து இந்தியாவிலே வளர்ந்து இந்திய சீதோஷ்ணங்களை யநுபவித்து இந்தியாவின் சுகதுக்கங்களையே நாடோறும் விரும்பியும் வெறுத்தும் வருபவர்களாகிய நாம், நம்மில் யாதொரு கலகத்தையும் செய்துகொள்ளாமல் கூட்டுறவுகொண்டு வாழ்வதற்கு, இத்தகைய பிரம்மோத்ஸவங்களும் முக்கிய காரணங்களிற் சேர்ந்தவையாகின்றன. ஏனெனில் நம்மில் பெரும்பாலாரும் ஒரே தெய்வமுண்டு என்னும் பெருங்கொள்கையைக் கைப்பற்றியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். ஆகலின் நாம் பொதுக்கூட்டுறவுக்குக் காரணமாகிய இந்தப் பிரம்மோத்ஸவத்தின் தத்துவத்தைச் சிறிதேனும் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

கூட்டுறவு.

உலகத்தில் பகுத்தறிவினை விசேஷமாகப்பெற்று உயர்திணைப் பகுப்பில் சார்ந்தவராகிய நாம், இன்றியமையாத வாழ்க்கையாகிய இல்வாழ்க்கையையே உறுதியாகப்பூண்டு வாழ்வதற்குப் பொதுக்கூட்டுறவு மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. ஏனைய துறவறத்துக்கும் இவ்வொற்றுமையானது ஒப்பமுடிந்ததொன்றாயினும் இல்

லறப்பகுதியினர்க்கு அத்தியந்த அவசியமாகுமென்பதை யுணர்த்தினோம். உலகக்கூட்டுறவில் பழகிவரும் நாம், நம்மில் சிறுவெறுப்புக் கொள்ள நேர்ந்தபோது கனகோபத்தையும் மனஸ்தாபத்தையும் தேகவியாதியையும் ஊர்க்கலகத்தையும் தேசக்கலக்கத்தையும் கூட்டுறவிற் குறைவையும் முறையே பெறக்காண்கிறோம். இப்படி உறவுக்கும் ஊருக்கும் தேசத்துக்கும் ஆகவேண்டிய முன்னேற்றத்தைத்தடுப்பது மாத்திரமன்றி, நமது (ஆன்மாவின்) முன்னேற்றத்துக்கும் ஒரு தடையை யமைத்துக்கொண்டவராகிறோம். எப்படியெனில், வெறுப்பு அல்லது த்வேஷம் என்னுமொரு தோஷம் நமது மனத்தில் குடியேறவே அன்பு என்னும் அரியகுண வளர்ச்சி தடைபட்டுச் சித்தம் அசுத்தமடைகின்றது. இந்த அசுத்தமே சித்தசுத்தியைக் கெடுக்கின்றது. இதுவே ஆத்ம முன்னேற்றத்துக்குத் தடையாக நிற்கின்றது. ஆக நமது அநுபவத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் தீயகுணமாகிய வெறுப்பு என்னும் த்வேஷத்தை அறவே ஒழித்து நற்குணமாகிய அன்பைச் செழிக்கச்செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது பொதுக்கூட்டுறவுக்கு வித்தாகிய இவ்வன்பின் நிகழ்ச்சியானது நமது அநுபவத்தில் மூன்று பிரிவினதாகக் காணப்படுகின்றது. எங்ஙனமெனில், நமக்குச்சமானமானவர்களை நாம் காணநேரும்போது ஒருவகையான நிகழ்ச்சியையும், நம்மிற் சிறியாரைக் காணநேர்ந்தபோது மற்றொரு வகையான நிகழ்ச்சியையும், நம்மிற் பெரியாரைக் காணநேர்ந்தபோது பிறிதொரு வகையான நிகழ்ச்சியையும் அநுபவவாயிலாக உணர்கின்றோம். இவை முறையே பிரியம் கருணை பக்தியென்று அழைக்கப் பெறுகின்றன.

பக்தி.

நமது வியாஸத்துக்கு அத்தியந்தமாகிய தொடர்புடையது பக்தியேயாகலின், ஏனைய பிரியம் கருணை என்னும் இரண்டு குணவிசேஷங்களையும் விடுத்துப் பக்தியைப்பற்றி இவ்விடம் பேசவாரம்பிக்கின்றோம். பக்தியாவது நம்மிற் பெரியாரிடத்தில் நாம் அவசியம் செலுத்திக்கொள்ளவேண்டிய கூட்டுறவின் கடமைகளில் ஒன்றெனக் கருதப்படுகின்றது. பெரியாராவார், மாதா, பிதா, குரு, அரசன்,

தெய்வம் என்பவரேதாம். இப்படிப் பெரியாரென்று பகுக்கப் பெற்றவர்களுள் முன்னைய நால்வரிடத்திலும், ஆதாவினாலும் பயத்தினாலும் இயற்கையாகவே நமக்குப் பக்தி ஜனிக்கின்றது. ஆனால் தெய்வத்தினிடத்திலோ, சாஸ்திர விசாரணையினாலுண்டாகிய அறிவின் பெருக்கத்தினாலேயே பெரும்பான்மையும் பக்தியையுண்டாக்கிக் கொள்ளவேண்டியிருக்கின்றது. சாஸ்திர விசாரணையின்மையினால் உண்டாகக்கூடிய தெய்வபக்தியானது பெரும்பாலும் மூடபக்தியென்றே அழைக்கப்பெறும்; அது மனித சக்தியை விருத்தி செய்யும் அம்சத்தில் பயன் தருவதாகக் காண்கின்றோமில்லை.

எதிர் பார்த்திராத வண்ணமாக நமக்குத் தோன்றக்கூடிய விருப்பு வெறுப்புகட்குக் காரணங்களான இன்பதுன்பங்களே தெய்வபக்திக்கு வித்துக்களாக இருக்கின்றன. இவை முன்வினைகளினால் நிகழ்வனவேனும், அவற்றைச் சமயமறிந்து கூட்டுவிப்பானொருவனையே நாடி நிற்கின்றன. ஏனெனில், நாம் முதிராத அறிவுடையவர்களாகவும் நமது நல்வினை தீவினைகள் அறிவற்றவைகளாகவும் இருப்பதனால், அறிவில்லாதனவாகிய அவற்றை நமது காலங்கட்குத் தகுதியாகப் பரிமாறிக்கொள்ளவேண்டிய ஆற்றலற்றவர்களாக இருக்கின்றோம். இதுவே நமது அற்ப அறிவின் தன்மையாகும். ஆதலால், முற்றறிவுடைய (ஸர்வஞ்ஞனாகிய) ஒருவன் நமக்குத் தோன்றாத் துணையாயிருந்து நமது முன்வினைகளை இடநோக்கி ஸங்கல்ப மாத்திரையினால் கூட்டுவித்துத் தயை தண்டனைகளைச் செய்து நமக்கு இன்பதுன்பங்களைத்தந்து நம்மைத் திருத்தவேண்டியவனாக இருக்கின்றான்.

கடவுள்.

எண்ணிறந்த சேதனாசேதனங்களாகிற ஜீவகோடிகட்கு ஆதாவுள்ளவனாக இருந்து அவற்றினிடம் பட்சபாதம் காட்டாமல் அவற்றின் பக்குவத்துக்கு ஏற்றபடியும் அவற்றின் பூர்வ ஜன்மத்தளவில்விட்ட குறைகளுக்கு ஏற்றபடியுமான பொருள்களை யாக்கிக்கொடுப்பதோ, பொருளல்லாதனவற்றைப் போக்கியருள்வதோ இவற்றைத் தேசகாலங்கள் நோக்கிக் கூட்டிக்காப்பதோ ஆகிய காரியங்களைச்செய்

யக்கூடிய ஒருவனை கடவுளெனக் கூறப்படுகிறான். ஏனெனில், அவன் ஏனைய ஜீவர்கள் போலாகாமல், கரணேந்திரியங்கட்கு அப்புறப்பட்டு அவற்றைக் கடந்தவனாக இருக்கின்றான். அவன் ஆன்மாக்கட்கு வேண்டிய எல்லாவற்றையும் தனதிச்சையாற் செய்து வைக்கும் ஆற்றலமைந்துள்ளவனாகலின் எல்லாம் வல்லவன் என்றும், ஆன்மாக்களின் நன்மை தீமைகளை அறிந்திருந்தாலல்லாமல், அவர்கட்கு வேண்டியவற்றை யாக்கிக்கொடுத்த லியலாமையின், எல்லாமறிதலுண்மைபற்றி அவன் எல்லாம் அறிந்தவன் என்றும், எங்கும் நிறைந்திருத்தல் ஒல்லாவிடின் யாவற்றையும் அறிதல் இயலாமையின், எங்கும் நிறைந்திருக்கும் திறமைபற்றி அவன் எங்கும் நிறைந்தவன் என்றும், என்றும்அழியாதஒருவனானாலல்லது என்றும் எங்கும் நிறைந்திருத்தல் இயலாமையின், அழிவில்லாமை பற்றி அவன் அழிவில்லாதவன் என்றும், அங்ஙனமாகிய அவனுக்கு வேறோர் தலைவனும் காரணமும் இருத்தல் ஒல்லாமையின் ஆதிமத்யாந்தரஹிதன் என்றும், சேதனாசேதனங்களை அவையறியும் வண்ணமும் அறியாத வண்ணமும் ஏவுந்தன்மையுண்மையால் இறைவன் என்றும் கருதப்படுகின்றான்.

மூர்த்திகாரணம்.

அவன் தன்னிச்சையாலுண்டான பஞ்ச பூதங்களினுள்ளும் நுழைந்திருந்து ஆன்மாக்கட்கு உபயோகமான பௌதிகப் பொருள்களை யாக்கிக்கொடுத்தும், அவற்றுக்குத் தீங்கிழைக்கும் பௌதிகப் பொருள்களை யழித்துக்கெடுத்தும் அந்தப்பௌதிகப்பொருள்களின் சூட்சும பூதங்கள் ஆன்மாக்கள் இவற்றின் உள்ளும் புறமும் பாவியிருந்தும் ஆன்மாக்களை இயக்கி வருகின்றான்.

பொருள்களை யுண்டாக்கிக் கொடுக்கும்போது, தான் காரணமற்றவனாகலின், தான் வேறொன்றினின்று பிறந்திராமை பற்றி அஜன் அல்லது அயன் அல்லது பிரமன் என்றும், ஆகாப்பொருள்களை யழிக்குங்குணமுண்மையின் ஹரன் என்றும், ஆன்மாக்கள் பூதங்கள் பௌதிகங்கள் இவற்றின் உள்ளும்புறமும் வியாபித்திருப்பது உண்மையின் விஷ்ணு என்றும் அழைக்கப்படுகின்றான்.

ஸகுணமூர்த்திகள்.

பிரபஞ்சத்தில், நமது விசாரணையில் மனத்துக்கும் வாக்குக்கும் எட்டக்கூடிய பஞ்ச பூதங்களே ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்னும் முக்குணவசத்தனவாகிப் பௌதிகப்பொருள்களாகப்பரிணமமடைந்திருக்கின்றனவாகக் கருதப்பெறுகின்றன. பஞ்சபூதங்களும் சப்தம் ஸ்பரிசம் ரூபம் ரஸம் கந்தம் என்னும் பஞ்சகுண மாத்திரைகளையுடையனவாக இருக்கின்றன. அவற்றுள் ஆகாசம் சப்தம் ஒன்றையே யுடையதாகவும், அதினின்றும் உண்டாகிய வாயு என்னும் பூதம் ஆகாசத்தின் குணமாகிய சப்தத்துடன் தனது இயற்கைக் குணமாகிய ஸ்பரிசமும் சேர்ந்து இரண்டு குணங்களையுடையதாகவும், இதனிலிருந்து உண்டாகிய அக்கினி பூதம் முன்னிரண்டு குணங்களோடு தனது இயற்கைக் குணமாகிய ரூபமும் சேர்ந்து மூன்று குணங்களையுடையதாகவும்; இவ்வக்கினியிலிருந்து உண்டாகிய ஜலபூதம் முன்னைய மூன்று குணங்களுடன் தனது இயற்கைக் குணமாகிய ரஸமும் சேர்ந்து நான்கு குணங்களையுடையதாகவும், ஜலத்திலிருந்து உண்டாகிய கடைசியான பிரிதிவி பூதம் அந்த நான்கு குணங்களுடன் தனது இயற்கைக் குணமாகிய கந்தமும் சேர்ந்து ஐந்து குணங்கள் உடையதாகவும் கண்டறியப்பெற்றிருக்கின்றன.

பௌதிகப்பொருள்களெல்லாம் பூதாம்சங்களையும் குணாம்சங்களையும் பெற்றிருக்கின்றன. மனித சக்தியால் இயற்றப்படக்கூடாமல் தோற்றமாயிருக்கிற அநேகமான பௌதிகப்பொருள்களை யாக்கவும், அளிக்கவும் அழிக்கவும் வல்ல ஒரு பெருங்கடவுளே உலக காரியங்களாகிய சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்துகொண்டு வருகின்றானென்பது ஆஸ்திகர் யாவராலும் ஒப்புக்கொள்ளப் பெற்றதொரு உண்மை. அப்பெருமானே அப்பூதங்களில் பிரவேசித்து அவ்வரியகாரியங்களைப் பௌதிகப் பொருள்களில் சாதித்துக்கொடுக்கின்றானென்பதும் உண்மையே. ஆக அப்பூதங்களில் கண்கட்குப் புலனாகாத ஆகாசம் வாயு என்னுமிரண்டு மொழிந்த அக்கினி ஜலம் பிருதிவி என்னும் மூன்றுமே பிரத்தியக்ஷ பூதங்களாகின்றன.

(பிரத்தியக்ஷமென்றால் கண்ணுக்குப் புலனாவதென்று பொருள்.) இவை மூன்றும் முறையே ஸம்ஹாரம் ஸ்திதி ஸ்ருஷ்டியாகிய காரியங்களைச்செய்து வருவதற்கு உதவியாக இருக்கின்றன.

அருட்பெருஞ்சோதியும் பூதபௌதிகங்களிலும் சேதனா சேதனங்களிலும் சராசரங்களிலும் ஓதப்ரோதமாகக் கலந்துள்ளானென்பதுந் தத்வமாகவின், அவன் முத்தொழில்களையும் செய்தருள்வதற்கு மேலே சொல்லப்பெற்ற பிரத்தியக்ஷ பூதங்கள் மூன்றையுமே உபகரணங்களாகக்கொண்டு நடத்தி வருகின்றான் என்பதும் இழுக்காது.

ஆக, பிரத்தியக்ஷ பூதங்கள் மூன்றாகிய அக்கினி ஜலம் பிருதிவி என்பவற்றுள் அக்கினி பூதத்தை உபகரணமாகக்கொண்டு நடத்தும் மூர்த்திக்குப் பவளநிறமும் உஷ்ணகுணமும் ஸம்ஹாரத்தொழிலும் இயற்கையெனக் கொண்டு வழிபடுகின்றோம். அடுத்துள்ள ஜலபூதத்தை உபகரணமாகக்கொண்டு நடத்தும் மூர்த்திக்கு மரகதநிறமும் சீதகுணமும் ஸ்திதித்தொழிலும் இயற்கையெனக் கொண்டு வழிபடுகின்றோம். பின்னுள்ள பிருதிவி பூதத்தை யுபகரணமாகக்கொண்டு நடத்தும் மூர்த்திக்குப் பொன்னிறமும் சீதோஷ்ண ஸமகுணமும் ஸ்ருஷ்டித்தொழிலும் இயற்கையெனக் கொண்டு தியானிக்கிறோம்.

அவதாரங்கள்.

இப்படி ஒரு நாமமும் ஒருருவமும் ஒருகுணமு மில்லாதவராகிய பரதத்வ ஸ்வரூபியான பரமாத்மாவைச் சராசரங்கட்கு ஸ்ருஷ்டியாதி காரியங்களைச் செய்வதன் நிமித்தம் பூதாம்ச குணாம்சங்களைத் தன்னை கொண்டுள்ள வ்யூஹமூர்த்திகளாகிய மும்மூர்த்திகளாக உபாசித்து வருகிறோம். நிற்க, பிரபஞ்சத்தில் அவ்வக்காலங்களில் அதர்மத்தைத் தாழ்த்தித் தர்மத்தை யுயர்த்துவதன்பொருட்டு மனுஷ்யரூபத்தில் அதிகாரி புருஷர்களாக அரசருருவத்திலேனும் ஆசாரியருருவத்திலேனும் எல்லாம் வல்ல இறைவன் தோன்றுவதுண்டு. இவைகள் அவதாரங்கள் எனப்பெயர்பெறும். இந்த அவ

தாரங்கள், பிறவிமுதலே மனுஷ்ய சரீரத்தில் அம்சமாகத் தோன்றுவதும், வேண்டிய காலங்களில் ஒரு உத்தம பக்குவமுடைய மஹானது சரீரத்தில் ஆவேசமாகத் தோன்றுவதும் உண்டு. இவை முறையே அம்சாவதாரமென்றும் ஆவேசாவதாரமென்றும் அழைக்கப்பெறுகின்றன. இப்படி யவதாரஞ் செய்த மஹாபுருஷர்கள், தங்களது உடல் பொருள் ஆவிகளையேற்றபெற்றி பரித்தியாகம் செய்வதன் மூலமாகத் துக்கங்களை ஸஹித்துக்கொண்டு அதர்மங்களைக்கெடுத்து அதார்மிகர்களை யழித்துத் தர்மத்தையுயர்த்தி உலகத்தையுய்யக்கொள்ளுகின்றார்கள்.

இவர்களது கல்யாண குணங்கள் நிரம்பிய சரித்திரங்களைப் பரக்கச்சொல்லும் நூல்களே, வேதத்துக்கு உபப்ரம்மணங்களாகச் சொல்லப்பெறுகின்ற இதிஹாஸ புராணங்களாகும். இவற்றைப் படிப்பதனாலும் கேட்பதனாலும் உலகினர்க்குத் தர்மத்தில் ப்ரவ்ருத்தியும் அதர்மத்தில் நிவ்ருத்தியும் ஜனிக்கின்றன. இவையே ஆத்ம முன்னேற்றத்துக்குத் தக்க ஸாதனங்களாகக் கவனிக்கப்பெறுகின்றன. ஆக இந்த இதிஹாஸ புராணநிஸ்மரணங்களாலும் வேத ச்ரவணத்தினாலும் உலகினர் தமது தமது பக்குவத்திற்கு ஏற்றபடி பரத்வமூர்த்தி யையாவது வ்யூஹமூர்த்தி களையாவது அவதார மூர்த்திகளாகிய விபவமூர்த்தி களையாவது எப்போதும் த்யானித்த வண்ணமாக இருக்கின்றார்கள். பரம்பொருளும் அவரவர் பக்குவத்துக்கேற்றபடி அவரவர் விரும்பியவண்ணம் அவரவர் மனதினை வாசஸ்தானமாகக்கொண்டு அவரவரது தர்மத்தை யுயர்த்துகிறான்.

" யாதொரு தெய்வங்கொண்டீர்
அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர் "

என்றும்

" தமருகந்ததெவ்வு மவ்வுருவந்தானே.
தமருகந்ததெப்பேர்மற்றப்பேர்—தமருகந்த
தெவ்வண்ணஞ்சிந்தித்திமையா திருப்பரே
யவ்வண்ணமாழியானும் "

என்றும்

பெரியார் பணித்துள்ளார்கள். இந்த அவஸரத்தையே அந்தர்யாமியவசரம் என்கிறோம். இந்த மூர்த்தியே ஜீவர்களது உள்ளத்தைக்குடிகொண்டு அருள்கின்றான்

ஆலயங்கள்.

மந்த மதிகளுக்கே யன்றி தீவ்ரமதிகட்கும், தங்களது நேயர்களையேனும் உபகாரிகளையேனும் குருக்களையேனும் அரசர்களையேனும் நேரில் தரிசிக்கப்பெறாமல் நெடுங்காலம் கடந்துவிட நேருமாகின் அவரது உருவங்கள் மனத்திலிருந்து மறைந்துவிடுகின்றன. உருவம் மறைந்துவிடவே அவர்களது சரித்திரங்களும் ஒருவாறு மறைந்து விடலாகும். தர்மத்தை வ்ருத்தி செய்வதற்குக் காரணமான அவர்களது சரித்திரங்கள் நினைவிலிருந்து மறைந்துவிடவே, ஆத்ம முன்னேற்றத்திற்குத் தடையேற்பட்டு விடுகின்றது. ஆகவே அவர்களது உருவங்களைப் புகைப்படங்கள் ரூபமாகவும் சிலை ரூபங்களாகவும் வைத்துத் தரிசனம் பெறுகிறோம். இது போலவே உலக காரணரும் பரத்ஸ்வரூபியுமான பகவான் பூதாச்ரயர்களான வ்யூஹமூர்த்தி களாகவும் விபவாச்ரயர்களான அவதாரமூர்த்தி களாகவும் அனந்தகல்யாண குண சேஷ்டிதங்களைச்செய்து உலகத்தோருக்கருளியபடியைப ஸ்மரிக்கும் பக்குவிகளுடைய ஹ்ருதயாச்ரயரான அந்தர்யாமிமூர்த்தி யாக எழுந்தருளியிருக்கின்றாரென்பது முன்னமே சொல்லப்பெற்றது.

அந்த மூர்த்திகளது திவ்ய சொரூபங்களை யாவரும் எளிதில் தரிசித்து உய்ந்தேறும் பொருட்டு விக்ரஹ ரூபமாகவும் எழுந்தருளப்பண்ணுவிக்க வேண்டுவதும் அவசியமாயிற்று. எப்படி காலங்களில், ஆராதனங்களும் நிவேதனங்களும் பெரியோருக்கு உபசாரணையுடன் சமர்ப்பிப்பதுபோல உபசரித்தலும் அவசியமேயாகின்றது. இந்த உபசாரபூஜாதி காரியங்களின் மேன்மையாலும் ஆவாஹன ப்ரதிஷ்டாமந்திரங்களின் பலத்தினாலும் விக்ரஹங்கட்கு மூர்த்திகரம் உண்டாகி, எங்கும் நிறைந்துள்ள பரத்வஸ்வரூபியான பகவானது தேஜோமய சொரூபமானது அவ்விக்ரஹங்களுட் பிரவே

சித்த தேஜஸைக் கொடுத்தருளவே, அவ்விக்ரஹங்களும் பக்தி பூர்வமாகவேண்டினார்க்கு வேண்டியவற்றை யுதவும் வரதத்துவத்தையு மடைகின்றன. எனவே பக்தர்கட்கு அவ்விக்ரஹங்களில் வெளிப்படையாகத் தோன்றும் விக்ரஹ புத்தி மறைந்து பகவத் புத்தியே யதிகரித்து, தாங்கள் எண்ணியபடியே தமது தவங்கள் முடிவுறப்பெற்றுத் திருப்தியை அடைந்து அந்தபக்தர்கள் மேன்மேலும் பக்தியைப் பெருக்கிக்கொள்ளுகின்றார்கள்.

இவ்விதமாக அந்த விக்ரஹங்களை ஒரு தனியான இடத்திலில்லாமல் பொதுவாக யாவருக்கும் ஸுலப சாத்யமாகும்பொருட்டுத் திருக்கோயில்களில் எழுந்தருளப் பண்ணிவைத்துப் பூஜாகாரியங்களை நடத்திவருகின்றோம்.

மஹாமேதாவிகளாகவுள்ள நமது பூர்விகப்பெரியோர்களால் இவ்விஷயம் யத்னம் செய்யப்பெற்று நடந்தேறி வருகின்றதாதலால், திருக்கோயில்களும், அதில் எழுந்தருளப் பண்ணிவைத்திருக்கும் பகவத் சொரூபங்களும் தேஹமும் தேஹத்தின் ஹ்ருதயாச்ரயரான அந்தர்யாமிமூர்த்தியுமாகவே, நிர்மாணம் செய்யப்பெற்றிருக்கின்றன.

உத்ஸவங்கள்.

இப்படி அந்தர்யாமியான பகவானை ஹ்ருதயம்போன்ற கோயிலின் கர்ப்பக்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி வைத்தபெரியோர்கள், அந்தப் பகவானது அவதார ரஹஸ்யங்களையும் அனந்தாதிவைபவங்களையும் துஷ்ட நிக்ரஹ சிஷ்டபரிபாலனாதி காரியங்களையும் பக்தர்கள் ப்ரத்யக்ஷ தரிசனம்செய்துய்யும்பொருட்டு அந்தந்தச் சரித்திரங்களை விளக்கக்கூடியபடி திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கட்கு நித்யோத்ஸவ வாரோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ வருஷோத்ஸவாதி பிரம்மோத்ஸவங்களையும் பண்ணும்படி ஆஞ்ஞாபித்தும் இருக்கிறார்கள். இந்த உத்ஸவவைபவ தரிசனத்தினால் ஜனஸமூஹ வேற்றுமைகள் நீங்கப்பெற்று ஒற்றுமை கொள்ளவும், தாமஸ ராஜஸங்கள் குறைந்து ஸாத்விகம் அதிகப்படவும் அதர்மம் நீங்கித் தர்மம் குடிகொள்ளவும் அபகாரசிந்தை நீங்கி உபகார சிந்தையோங்கவும் வழியுண்டாகிறது.

பத்திராதிபர்.

திருப்பரங்கிரிச் செவ்வேள் பதிகம்.

நேரிசை வெண்பா.

1. ஆறுபடை வீட்டினுமுன் னும்பரங்குன் றார்மனமே
ஏறுமயில் வீரன்றே வேந்திரன்சீர்—‡வீறு
மகளை §விதிபரன்மால் வாழ்த்தமணம் ஆற்றும்
துகளில் பதியாத் துதி.

‡ வீறும்-சிறக்கும், § விதி-பிரமன், இத்தலம் தெய்வயானை திருமணம் நிகழ்ந்த இடம்.

2. தந்தை யரனுக்குத் தத்துவம்போ தித்தசித்த!
கந்த! பரங்குன்ற! கயற்கணுமை—சிந்தைமகிழ்
மாசுப் பிரமணிய! வந்தருளுன் பாதமெனும்
மாசுப் பிறவி மருந்து.

3. தமிழ்க் குருகும் வித்தக! பூ தக்கத்தாற் கீரன்
குமைப் புறுதுன் போட்டுங் குமரா—எமைப் புரத்தல்
ஐயா! பரங்கிரியா! ஆறுமுகா! பன்னிரண்டு
கையா உனக் கரிதோ காண்.

4. திருப்பரங் குன்றுறையும் செவ்வேளென் †இமைப்
பரப்பருங் குன்று பறித்தென்—விருப் பொருங்கு
நின்றிருவ டிக்கே நிகழவருள் செய்யன்றோர்
*குன்றுருவு வேலா! குறித்து.

† இமைப்பாப்பாங் குன்று என்றபடி, * குன்றுருவு-கிரௌஞ்சகிரியைத் தொளைத்த.

5. தேவர்க் கிடர்விளைத்த §தெவ்வசுரர்த் தேய்த்தழித்துத்
தேவர்கோன் பெற்றளித்த சேயிழையைக்—காவலரும்
தென்பரங் குன்றிற் றிருமணங்கொள் செவ்வேளே!
உன்பரங் காப்பதெனை யுற்று.

§ தெவ் அசுரர்—பகையாம் அசுரர்களை.

6. கூடற் கடித்தபரங் குன்றுஞ் சரவணமும்
கூடற்கு மாடற்குங் கோன்குகன்சீர்—பாடற்குய்
இன்றேழைக் கிதெல்லாம் எய்துவித்த முன்வினையே
நன்று யுனைத்துதிப்பேன் நான்.

7. பிரமனுக்கு மேலாம் பிரணவச்சி ரோதிப்
பரமனுக்கு ஞானம் பகர்ந்து— ‖ திருமனுக்குச்
சூரளித்துக் காப்பளிக்கும் தொல்பரங் குன்றொளிரும்
வீரன்மும் மூர்த்திக்கும் மேல்.

‖ திருமன்-திருமகள் தலைவன், சூரனையழித்தலால் காத்தற்றொழிலைத் திருமாலுக்கு முருகக்கடவுள் அளித்தமை காண்க.

8. கோலக்கொண் டல்மீது கொண்ட முழுமதியோ
நீலக் கடலிலெழு நீள்சுடரோ?—சோலைக்
குயிலாருந் தென்பரங் குன்றிற் குலவி
மயிலேறுஞ் செவ்வேள் வளம்.

9. தெருளோ டழகு செறிமுகங்க ளாறும்
அருளோடு கண்களீ ராறும்—சுருளாம்
கடம்பத் தடம்புயமுங் கைவேலுங் கண்டேன்
திடப்பொற் பரங்குன்று சென்று.

10. வேண்டும் பொருளொன்றே மெய்யுணர்வு மேவி உன் சீர்
யாண்டும் புகல இனிதருள்வாய்—நீண்ட
திருப்பரங்குன் றோடுவள்ளி தெய்வமகள் தொண்டர்
* விருப்பரங்கென் றுடுஞ்செவ் வேள்.

* விருப்பு அரங்கு என்று எனப்பிரிக்க.

வே. முத்துஸாமிஐயன்.

ஒரு சினங்கொள் மரம்.

இடாஹோ என்கிறவிடத்தில் வேலமரத்தின் இனத்தைச் சேர்ந்த விருக்ஷம் ஒன்றுண்டு. ஓஷதி சம்பந்தமான ஜீவராசிகளினுள்ள அநேக விநோதங்களில் இதுவும் ஒரு முக்கியமானது.

இந்த மரம் சுமார் 8-அடி உயரம் வரையில் வளரும். மரம் முற்றிலும் வளர்ந்துபோன பிறகு சூரியாஸ்தமனம் ஆனதும் தினந்தோறும் தன் இலைகளைச் சுருள் சுருளாக மூடிக்கொண்டுவிடும். அப்போது மரம் தூங்குவதற்குத் தன்னைத் தயார்செய்துகொள்கிறது என்று அறியவேண்டும். அந்த மரத்தை அச்சமயம் எவரேனும் தொட்டுவிட்டால், உடனே படபடவென்று வேகமாய் மரக்கிளைகள் துடித்துப் பலமாய் (பக்ஷிகள் சிறகுகளை அடித்துக்கொள்வதுபோல) அடித்துக்கொள்ளும். அதன் கிளைகளை நாம் பிடித்து அசைத்துவிட்டோமானால், நமக்கு மட்டில்லாத் தலைவலியும் மயக்கமும் உண்டாகக் கூடிய அளவு கொடுமையான ஒருவித துர்நாற்றத்தை வீசும். ஆகவே இடாஹோ என்னும் அந்த இடத்துள்ளார் அதனைச் சினங்கொள் மரம் என்று அழைக்கிறார்கள்.

சில யாத்திரைக்காரர்கள் இரவில் மரத்தடியில் தங்கும்படி நேர்ந்தபோது அவர்கள் இவ்வாச்சரியத்தைக்கண்டுகொண்டார்களாம். இந்த யாத்திரைக்காரர்களில் ஒருவன் அம்மரத்தின் மிகக்கூர்மையான உணர்ச்சியுள்ள ஒரு தாழ்ந்திருந்த கிளையில் தன் வஸ்திரத்தை இழுத்துப் போட்டான். உடனே மரம் தன் கிளைகளையெல்லாம் குலுக்கிக்கொண்டு கலகலவென்று அசையத்தொடங்கியது. அதன் நரம்புச் சக்தி மிகவும் கூர்மையானதால் மரத்திற்கு அச்சமயம் நடுக்கம் தொடர்ந்து விருத்தியாகிவிட்டது. இறுதியில் தாங்கக்கூடாத துர்வாசனையை மரம் கக்குவதற்கு ஆரம்பித்தது. யாத்திரைக்காரர்கள் அம்மரத்தடியைவிட்டு விலகி வேறொரு ஸாதாரணமான மரத்தடிக்குச் சென்றார்கள். பிறகு கிரமமாக நடுக்கமும் துர்வாஸனையைக் கக்குவதும் அடங்கிவிட்டன.

Practical Medicine.

உ

சுலக்ஷணை.

(௰-ம் தொகுதி ௰௧-ம் பகுதி ௪௱௨-ம் பக்கத்தொடர்ச்சி.)

சூடாமணி, "ஏதோ அப்படித்தான் இருக்கும். நாம் வெளியே போவோம் வா."

மதிமான், "ஆம். எனக்கும் வெளியே போகத்தான் பிரியம், ஏனென்றால் நான் இன்றிரவு தனியே இருக்கவேண்டியிருக்கிறது. பாலாமணி நாடகமாடுவதற்குப் போய்விட்டாள்."

சூடாமணி, "என்ன! நீ பாலாமணி வீட்டுக்குப்போவதை நிறுத்திவிட்டாயா?"

மதிமான், "இல்லை, இன்றிரவு நான் உன்னோடு இருக்கவேண்டியபடியால் அவள் தனியே இருக்கவேண்டியதுதான்."

பிறகு இருவருமாக வெளியே சென்றார்கள். முதலில் சூதாடுமிடத்திற்குப்போய், அங்கே சூடாமணி தனக்குக் கடிதமூலமாய் வந்த ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை மாற்றினான். சூதாட்டத்தில் முந்நூறு ரூபாய் தோற்றான். சூதாடிக்கொண்டிருக்கும்பொழுதே சாராயங்களை மிதமிஞ்சிக்குடித்தான். பிறகு இருவரும் அந்த இடத்தைவிட்டு வெளிக்கிளம்பினார்கள். மறுநாள் சண்டை நடக்கப்போகிற விஷயத்தைப்பற்றிச் சூடாமணி மதிமானுக்குச் சொல்லவில்லை.

அவர்கள் வீட்டிற்குத் திரும்பியபொழுது இரவு மணி இரண்டாயிற்று. மதிமான் தன் வீட்டுக்குப் போனான். சூடாமணியும் தன்வீட்டுக்குச் சென்று வேலைக்காரனாகிய கருப்பனிடம் தன்னைக் காலை ஐந்து மணிக்கு எழுப்பச்சொல்லி உத்தரவிட்டான். கருப்பன் தன்னுடைய அந்தரங்க வேலைக்காரனானபடியால் அவனிடம் மறுநாள் நடக்கப் போகிற சண்டையைப்பற்றிச் சொல்லியிருந்தான்.

மறுநாள் காலை ஐந்துமணிக்குச் சிந்தாமணி துரைச்சாமியின் வீட்டிற்குப்போனான். அவன் எப்போதும்போலவே அமைதியாயிருந்தான். இரவு நன்றாய்த் தூங்கினவனைப்போற் காணப்பட்டான் சுத்தமான உடைகளைத் தரித்திருந்தான். துரைச்சாமி வீட்டில் சிந்தாமணியும் துரைச்சாமியும் காலைப்போஜனமருந்தினார்கள். துரைச்சாமி கைக்கெடியாரத்தை எடுத்துப் பார்த்துவிட்டுச் சொல்லுகிறான், "இப்

பொழுது மணி ஐந்தரையாகின்றது. இன்னும் பத்து நிமிஷத்தில் என்னுடைய வண்டி தயாராய் இங்கே வந்துவிடும். அதற்குள் நீ ஏதாவது என்னிடம் சொல்லவேண்டியிருந்தால் சொல்."

தன் மடியிலிருந்த சாவியைக் கையிலெடுத்துக்கொண்டு சிந்தாமணி சொல்லுகிறான், "இதை வாங்கிக்கொள். இது என்னுடைய வீட்டிலிருக்கும் பெட்டியின் திறவுகோல். நான் சண்டையில் மடிந்தால், பெட்டியிலிருக்கும் கடிதங்களை எடுத்து மேல்விலாசத்தைப் பார்த்துக் கொடுத்துவிடு."

துரைச்சாமி, "நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். வேறு ஏதாவது தாக்கலுண்டா?"

சிந்தாமணி, "வேறொரு தாக்கலுமில்லை. உனக்கு அநேக வந்தனம்."

வண்டி வந்துவிட்டதென்று ஒருவேலைக்காரன் வந்து தெரிவித்தான். கைத்துப்பாக்கியிருந்த பெட்டியொன்றைக் கையிலெடுத்துக் கொண்டு இருவரும்போய்வண்டியில் ஏறினார்கள். வண்டி போய்க் கொண்டிருக்கும்பொழுது பற்பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தார்கள். கொஞ்சநேரத்தில் வண்டியும் குறிப்பிட்ட இடத்தில் போய் நின்றது. இருவரும் வண்டியைவிட்டுக் கீழே இறங்கினார்கள்.

காலை வெகு நேர்த்தியாய் இருந்தது. சூரியன் வானத்தில் தோன்றிவிட்டான். பக்ஷிகளெல்லாம் நித்திரை நீங்கி மரங்களிலுட்கார்ந்து கொண்டு பாடவாரம்பித்தன. சர்வவல்லமையுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்த உலகத்தின் இயற்கையையும் இதில் வசிக்கும் மனிதர்களுடைய குணங்களையும் சிந்தாமணி ஒப்பிட்டுப் பார்த்தான்.

"இதோ அவர்கள் வருகிறார்கள்," என்று துரைச்சாமி சொன்னான். உடனே சிந்தாமணி தன்யோசனையைவிட்டுத் திரும்பிப்பார்த்தான். தன் விரோதியான சூடாமணி இரண்டு பேர்களுடன் வருவதைக் கண்டான். அவர்களில் ஒருவன் காரியப்பன். மற்றவன் ஓர் இரணவைத்தியன்.

துரைச்சாமியும் காரியப்பனும் தரையை அளந்து சூடாமணியையும் சிந்தாமணியையும் சரியான தூரத்தில் நிற்கவைத்தார்கள். துப்பாக்கிகளில் குண்டுகள் வைக்கப்பட்டன. சூடாமணியும் சிந்தாமணியும் ஆளுக்கொரு துப்பாக்கியை எடுத்துக்கொண்டார்கள்.

துரைச்சாமி, எல்லாம் தயாராகிவிட்டது. இனிமேல் தாமதிக்கவேண்டாம். காரியப்பன் கையில் வைத்திருக்கிற கைபிடித்துண்டைக் கீழேபோட்டதும் சுடுங்கள். ”

காரியப்பன் துண்டைக் கீழே போடப்போகும் சமயத்தில் “ நில்லுங்கள் ” “ நிறுத்துங்கள் ” என்ற வார்த்தைகள் உரத்த சப்தமாய்க் கேட்டன. சப்தமுண்டான இடத்தை நோக்கி எல்லாருடைய கண்களும் திரும்பின. கங்காதரன் வெகு விரைவாய் ஓடிவந்தான். அவன் சிந்தாமணிக்கும் சூடாமணிக்கும் மத்தியில் நின்றுகொண்டு சொல்லுகிறுன், “ சண்டை நடக்கக்கூடாது. நீங்கள் மீறிச்சுட்டால் குண்டுகள் என் பேரில் தான் பாயும். ”

கங்காதரனைப் பார்த்ததும் சிந்தாமணி ஆச்சர்யப்பட்டவனைப்போற் காணப்பட்டான். இதைக் கவனித்த துரைச்சாமி புதிதாய் வந்தவன் அவனுக்குத் தெரிந்தவனு என்று சிந்தாமணியைக் கேட்டான்.

சிந்தாமணி, “ ஆம் அவர் இன்னுரென்பது எனக்குத் தெரியும். அவர் எனக்கு எவ்வளவோ உபகாரம் செய்திருக்கிறுர். ஆனுல் இத்தச்சண்டை நடக்கிற விஷயம் அவருக்குத் தெரிந்தது எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. ”

துரைச்சாமி “ அவரைச் சண்டையைத் தடுக்கவிடக்கூடாது ” காரியப்பன் என்ன சொல்லுகிறுனென்று பார்ப்போம்.

காரியப்பனும் துரைச்சாமியும் கங்காதரனைச் சும்மாயிருக்கச் சொன்னுர்கள்.

கங்காதரன், “ நான் இந்தச் சண்டையை நடக்கவிடமாட்டேன் ஒருவரையொருவர் கொல்வதற்காக ஏற்பட்ட இந்தச் சண்டை நடக்கவே கூடாது. ”

காரியப்பன், "இனிமேல் சும்மாயிருக்கக்கூடாது. இவனைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிவிடவேண்டும்."

சூடாமணி 'அது தான் சரி. அவனைப்பிடித்துக் கட்டுங்கள்.'

சிந்தாமணி "அவரை அவ்வாறு செய்ய நான் சம்மதிக்கமாட்டேன். ஆனால் இந்தச்சண்டையை நிறுத்த முயற்சி செய்வது கூடாதென்று நான் அவரையே கேட்டுக்கொள்ளுகிறேன்."

என்ன! சிந்தாமணி "நீ கூடவா அப்படிச் சொல்லுகிறாய்?" என்று கங்காதரன் சற்றுக் கோபமாய்ச் சொன்னான்.

சிந்தாமணி, "ஐயா, நான் துரைச்சாமியிடம் தாங்கள் என் சிநேகிதர் என்று சொல்லியிருக்கிறேன். ஆகையால் தாங்கள் இங்கே சண்டை நடக்காமல் தடுப்பதனால் இவர்கள் என்னை இழிவாய் நினைப்பார்கள்."

கங்காதரன், "நீ சண்டை செய்வதற்குப் பயப்பட்டதனால் உன் சிநேகிதனாகிய என்னிடம் சொல்லிச் சண்டையை நடக்காமல் தடுக்கச் செய்தாயென்று சொல்வார்களா? அப்படியானால் இதைப் பற்றி எனக்கு நீ யொன்றும் சொல்லவில்லையென்று சத்தியமாய்ச் சொல்லுகிறேன். இந்தச் சண்டை நடக்கும் விஷயம் எனக்கு வேறு வழியில் தெரியவந்தது."

காரியப்பன், "நீ சொல்வதை நம்பவேண்டுமென்பது அனுவசியம். ஆகையால் நீ சண்டையைத் தடுத்தால் சிந்தாமணியை இழிவாகத்தான் நினைப்பார்கள்."

"யாரெப்படி நினைத்தாலும் சண்டைநடக்கக்கூடாது," என்று கங்காதரன் தீர்மானமாய்ச் சொன்னான்,

"அப்படியானால் நாங்கள் எங்கள் தீர்மானத்தின்படி நடத்த வேண்டியதுதான்," என்று காரியப்பன் சொன்னான். உடனே கங்காதரன்மேற் பாய்ந்து அவன் கையிலிருந்த தங்கப்பூண் பிடித்த பிரம்பைப் பிடுங்கிக்கொண்டான். பிறகு காரியப்பனும் துரைச்சாமியும் சேர்ந்து கங்காதரனைப் பிடித்து இழுத்துக்கொண்டுபோனார்கள்.

கங்காதரன் கோபத்தோடு சொல்லுகிறான், சிந்தாமணி ஏன் சும்மா நிற்கிறாய்? இவர்கள் என்னைப்பிடித்து இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டு கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறாயே. இனிமேல் நான் உன் விஷயத்தில் ஒன்றும் செய்யமாட்டேன். சூடாமணி, நீயும் பார்த்துக்கொண்டு சும்மா யிருக்கிறாய். எனக்கு உதவி செய்யமாட்டாயா? இதற்காக நீ வருத்தப்படவேண்டி நேரிடும். சிந்தாமணி, என்னை இவர்கள் இவ்வாறு செய்யப் பார்த்துக்கொண்டிருக்கமாட்டேனென்று சொன்னாயே. அப்படிச் சொன்னபோதிலும் நீ—நீ——"

இவ்வாறு பேசிக்கொண்டிருந்த கங்காதரனை இழுத்துக்கொண்டு போய் மரத்தில் கட்டிவிட்டார்கள். கங்காதரனுடைய பயமுறுத்தல்களைக் கேட்ட சூடாமணி பரிகாசமாய்ச் சிரித்தான். சிந்தாமணி கைகளைக்கட்டிக்கொண்டும், தலையைக் குனிந்துகொண்டும் நின்றான் அவனுடைய முகம்வெளுத்திருந்தது. உதடுகள் துடித்தன. அவன் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. ஆனால் கங்காதரனுக்காக உண்மையில் வருத்தப்பட்டான்.

துரைச்சாமியும் காரியப்பனும் தங்களுடைய வேலையைச் செய்துவிட்டுச் சண்டை நடக்கவேண்டிய இடத்திற்குத் திரும்பினார்கள். கட்டிலிருந்து விடுவித்துக்கொள்ளுவதற்காகக் கங்காதரன் கால்களையும் கைகளையும் இழுத்துக்கொண்டிருந்தான். அங்கு நின்ற இரணவைத்தியன் தன் மடியிலிருந்த போத்தலொன்றை எடுத்து அதிலிருந்த திராவகத்தைக் கங்காதரனைச் சாந்தப்படுத்துவதற்காக அவன் தொண்டையில் ஊற்றுகிறேனென்று சொன்னான், கங்காதரன் மிகவும் கோபத்துடன் வைத்தியனை அப்பால் போகச்சொல்லிக் கட்டளையிட்டான்.

மறுபடியும் சண்டைக்கு எல்லாம் தயாராகிவிட்டது. காரியப்பன் கையிலிருந்த கைக்குட்டையைக் கீழேபோட்டான். ஒரு துப்பாக்கிதான் சுடப்பட்டது. அப்படிச் சுடப்பட்ட துப்பாக்கி சூடாமணியுடையது. சிந்தாமணியின்மேல் குண்டு படவில்லை.

"நீ ஏன் சுடவில்லை?" என்று காரியப்பன் சிந்தாமணியைக் கேட்டான்.

சிந்தாமணி, "எதிரியைச் சுட்டுக் கொல்லவேண்டுமென்பது என்னுடைய எண்ணமல்ல."

துரைச்சாமி, "உனக்குத் திருப்தியாயிற்றா சூடாமணி? சண்டையை நிறுத்திவிடுவோமா?"

சூடாமணி சற்றுநேரம் பதிற்சொல்லாமல் தாமதித்தான். சரியென்று சொல்லிவிடலாமென்று நினைத்தான். ஆனால் மாறுவேஷம் தரித்துக்கொண்டு வந்த ஸ்திரீயினுடைய ரூபமானது அவன் மனதில் தோன்றிற்று. சிந்தாமணியைக் கொன்றுவிட்டாற்றான் அவள் தனக்கு இசைவாளென்பதும் ஞாபகத்திற்கு வந்தது. ஆகையால் இன்னும் ஒருதரம் சுடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.

சூடாமணி, தான் சுடாமலிருந்தால் இரண்டாந்தரம் சண்டை நடவாது என்ற எண்ணத்தினால் சிந்தாமணி சுடாமலிருந்தானே யொழிய அவனுடைய தைரியத்தினால் சும்மாயிருந்தவனல்ல ஆகையால் நான் திருப்தியடையவில்லை.

"அப்படியானால் சண்டை நடக்கவேண்டியதுதான்," என்று காரியப்பன் சொன்னான்.

கங்காதரன் கட்டை அறுப்பதற்கு அதிகப் பிரயாசைப்பட்டுக் கொண்டே உரத்த சப்தமாய்ச் சொல்லுகிறான், "இது அனியாயமான கொலைத்தொழில். சூடாமணி, சிந்தாமணி.—"

இதற்குள் அதிகமாய்க் கத்தினபடியால் நாவரட்சியால் கங்காதரனாற் பேசமுடியாமற் போய்விட்டது.

புதிதான துப்பாக்கிகள் விரோதிக ளிருவருக்கும் கொடுக்கப் பட்டன. காரியப்பன் நிற்கவேண்டிய இடத்தில் நின்றுகொண்டு கைபிடித்துண்டைக் கீழே போட்டான். மறுபடியும் சூடாமணியினுடைய துப்பாக்கிமாத்திரம் வெடிதீர்ந்தது. ஆனால் இந்தத்தடவை சூடாமணியின் குறி தவறவில்லை. சிந்தாமணி தரையிற் சாய்ந்தான்.

"நீ அவனைக் கொலைசெய்துவிட்டாய்," என்று கங்காதரன் கத்தினான். இப்பொழுது அதிக முயற்சிசெய்து கட்டிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டான்.

காரியப்பனும் துரைச்சாமியும் சிந்தாமணியைத் தூக்கிக்கொண்டிருந்த இடத்திற்கு இரணவைத்தியன் ஓடிவந்தான். சூடாமணியும் தன்னாலியன்ற உதவியைச் செய்தான். சிந்தாமணியின் கண்கள் மூடிவிட்டன, அவனுடைய மார்பும் சட்டைகளும் இரத்தத்தால் நனைந்துபோய்விட்டன. உதடுகள் அசைவற்றிருந்தன. மூக்கில் சுவாசத்தைக் காணவில்லை.

இரணவைத்தியன், "ஓடுங்கள், ஓடுங்கள்; இனிமேல் இங்கே நிற்பதிற் பிரயோசனமில்லை. அவன் ஆவி ஆகாயத்திற்குச் சென்றுவிட்டது."

"இறந்துவிட்டானா?" என்று சொல்லி, கங்காதரன் முழங்காற்படியிட்டுக்கொண்டு அசைவற்றிருந்த சிந்தாமணியின் சரீரத்தைக் குனிந்து பார்த்தான்.

"ஐயா கங்காதரரே, இந்த விஷயத்தில் உம்மேல் ஒரு குற்றமுமில்லை. இந்தச் சாவியை வாங்கிக்கொள்ளும். இதனாற் சிந்தாமணியின் பெட்டியைத் திறந்து அதிலிருக்கும் கடிதங்களை மேல்விலாசத்தின்படி கொடுத்துவிடும்," என்று சொல்லி, சிந்தாமணிக்காக அழுதுகொண்டிருந்த கங்காதரன் கையில் துரைச்சாமி சாவியைக் கொடுத்தான், பிறகு அவன் சூடாமணி காரியப்பன் முதலியவர்களோடு அந்த இடத்தைவிட்டு ஓடினான். எதிரில் தன் வண்டியைச் சந்தித்தான். சண்டைநடந்த இடத்திற்குப் போய்ச் சிந்தாமணியின் சரீரத்தை வண்டியில் ஏற்றிக்கொண்டு கங்காதரன் உத்தரவின்படி வண்டியை நடத்தும்படி வண்டிக்காரனுக்குக் கட்டளையிட்டுச் சென்றான்.

புவனாலயம் ஜமீந்தாரரண்மனையில் அதிகமான சம்பவங்கள்.

உயரமான மனிதரூபமொன்று முகம் தெரியாமல் முக்காடு போட்டுக்கொண்டு வீதியில் நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது

இரவு பத்துமணியாயிற்று. அந்த ரூபமானது புவனுலயம் ஜமீந்தார் அரண்மனை வாசலில் வந்து நின்று கதவைத் தட்டிற்று. ஒரு வேலைக்காரன் கதவைத் திறந்தான். அந்த ரூபமானது உள்ளே நுழைந்து முக்காட்டை எடுத்தது. சூடாமணியின் முகமானது வேலைக்காரனுக்குத் தெரிந்தது.

சூடாமணி, " மதிமான் வீட்டிலிருக்கிறனு? "

வேலைக்காரன், " இல்லை, அவர் வீட்டிலில்லை. "

சூடாமணி சற்றுநேரம் யோசனைசெய்பவனைப்போற் காணப்பட்டான். பிறகு சொல்லுகிறன், " அவன் எங்கேபோயிருக்கிறுனென்று உனக்குத் தெரியுமா? "

மதிமான் போனவிடம் தனக்குத் தெரியாதென்றும், அவன் அன்று முழுவதும் வீட்டிலிருக்கவில்லையென்றும் வேலைக்காரன் சொன்னுன்.

சூடாமணி, " ஒருவேளை அவன் தாய்க்குத் தெரிந்திருக்கலாம். அவள் வீட்டிலிருக்கிறுளா? "

வேலைக்காரன், " ஆமையா. அவர்கள் வீட்டிலிருக்கிறுர்கள். "

சூடாமணி, தனியாயிருக்கிறுளா? அல்லது வேறு யாராவது அவளுடன் கூட இருக்கிறுர்களா?

வேலைக்காரன், " எஜமாட்டி தனியாய்த்தாவிருக்கிறுர்கள். "

வேலைக்காரன் சூடாமணியைச் சுலக்ஷணை இருந்த அறையிற் கூட்டிக்கொண்டுபோய்விட்டான். சூடாமணி சுலக்ஷணையின் அருகிலிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு சொல்லுகிறன், இன்றிரவு நான் இங்கே வருவேனென்று நீ எதிர்பார்க்கவில்லைப்போலும்.

சுலக்ஷணை, நான் உன்னை எதிர்பார்க்கவில்லை. மேலும் இந்த நிலைமையில் இந்நேரத்தில் நீ இங்கே வந்தது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,

ஆத்தங்குடி.

ஸ்ரீ:

மாககாவ்யம் அல்லது சிசுபாலவதம்.

———()———

(10-ந் தொகுதி 462-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகையால் ஏ! கிருஷ்ணா!! இப்போதே யுத்தத்திற்குப் புறப்படு. அதற்குத் தகுந்தகாலம் இதுவே. சத்துருக்களுக்குக் கஷ்டம் ஏற்பட்ட காலத்தில்தான் யுத்தம்செய்து சத்துருக்களைக் கொல்லவேண்டுமென்று காமந்தன் சொல்லுகிறான். தனக்குப் பலம் அதிகரித்திருக்கும் காலத்தில்தான் யுத்தம் செய்ய வேண்டுமென்று மனுவும் சொல்லியிருக்கின்றார். ஏ! கிருஷ்ணா!! இப்போது உனக்குச் சக்தியுள்ள காலம். சத்துருவுக்குக் கஷ்டகாலம். ஆகையால், இருவர்கள் சொன்னதையும் நாம் அநுசரிக்கலாம். இப்போது உனக்கு எப்படி நல்லகாலம் என்றால்:—உலகங்களை விழுங்கிவிடவேண்டுமென்ற விருப்பங்கொண்டுள்ள சமுத்ரத்தை எப்படிக் கரையானது தடுத்துக்கொண்டிருக்கின்றதோ, அப்படியே உலகங்களை ஸம்ஹாரம் செய்ய யத்தனித்திருக்கின்ற நம்மவர்களை உன்னுடைய பொறுமைதான் தடுத்துக்கொண்டிருக்கின்றது. யுத்தத்திற்கு ஆபத்தமானவர்களைத் தடுக்காமல்போனால் இந்நேரத்திற்குள் உலகையே அழித்திருப்பார்கள். புத்தியால் அநுபவிக்கப்பெறும் போகங்கள் யாவும் ஆத்மாவினால் அநுபவிக்கப்பெறுவதாக எப்படி வ்யவகரிக்கப்படுகின்றதோ அப்படியே உனது ஸைன்யம் அடையும் ஜயம் உன்னையேயடையும். ஆகையால் விரைவில் யுத்தத்தையாரம்பிக்கச்செய்.

சத்ருவிற்கு இப்பொழுது எப்படிக்கஷ்டகாலம் என்றால்:—அவனுடைய ஸ்நேகிதனான ஜராஸந்தன் பீமசேனனால் கொல்லப்பட்டது முதல் மித்ரநாசத்தினால் மிகவும் வருந்தி உதவிக்கு யாவருமில்லாமல் கஷ்டப்படுகிறான். இப்பொழுது அவன் ஒருவனாக இருப்பதால் அவனை வெகு ஸுலபமாகத்தொலைத்துவிடலாம். ஆனால் சந்திரனுக்கு வன்மை குறைந்த காலத்திலா ராகு அவனைப் பிடிக்கிறான். சத்ருவான சந்திரன் பூர்ணமாக இருந்து தன் கிரணங்களை வெளிவிட்டுப் ப்ரகா

சிக்கையில்தானே பீடிக்கிறான். அப்படியே நாமும் சத்ருவான சிசுபாலன் வன்மையுடன்கூடியகாலத்திலல்லவா யுத்தம்செய்யவேண்டும் அவன் வன்மை குறைந்து சிநேகிதனையிழந்து கஷ்டப்படுகின்றகாலத்தில் யுத்தம்செய்வது நம்மைப்போன்றவர்களுக்கு அழகா. அவமானமுண்டாகாதா. சாஸ்திர விரோதமில்லையா என்று கேட்டால் இருட்டும் வெளிச்சமும் சேர்ந்து ஒரே இடத்திலிருப்பது எப்படி அஸாத்தியமோ அப்படியே சாஸ்திரமும் பௌருஷமும் சேர்ந்து ஒரே கட்டுப்பாட்டில் நிற்காது. சாஸ்திரம் வேறுவழிதான், பௌருஷம் வேறுவழிதான்.

ஆகையால் நாம் இப்பொழுது பௌருஷத்தைக் கைப்பற்றித்தான் ப்ரயத்னம் செய்யவேண்டும். நாம் இப்பொழுது செய்யவேண்டிய கார்யம் என்னவென்றால் தர்மபுத்ரர் யாகம்செய்யப்போகிற ஊரான இந்திரப்ரஸ்தத்திற்குப் போகவேண்டாம். சிசுபாலனுடைய நாடான சேதிதேசத்திற்கே போவோம். போனதும் நம்முடைய மத்தகஜங்கள் அத்தேசத்திலுள்ள மரங்களை முறித்துக் கீழே தள்ளி அட்டஹாஸம் செய்யட்டும். மாடுகளை ஆகாரமில்லாமல் பட்டியிலடைத்துவைப்பதுபோல நம்முடைய இடையர்கள் அத்தேசத்திலுள்ள சத்ருக்களை வெளிவரவொட்டாமல் உள்ளேயே அடைத்து வருத்தட்டும்.

“ தர்மபுத்ரர் யாதொரு விக்னமின்றி யாகம் செய்யட்டும். இந்திரன் ஸ்வர்க்கத்தை ஸுகமாய் பரிபாலனம் பண்ணட்டும். சூர்யன் தன் கிரணங்களை நன்றாய் வெளிவிட்டு ப்ரகாசிக்கட்டும். நாமும் போய் யுத்தம்செய்து சத்ருக்களை த்வம்சம்செய்வோம். இவ்விதம் அவரவர்களுடைய வேலைகளை அவரவர்கள் செய்யட்டும். சூர்யன் ப்ரகாசித்துக்கொண்டிருக்கையில் ஏற்படும் மின்னல்கள் சிவப்பு நிறத்தையடைவதுபோலச் சத்ருக்களின் கழுத்தைத் துண்டிக்கும் நம்முடைய பாணங்கள் சத்ருக்களின் ரக்தத்தினால் சிவக்கட்டும்.

இவ்விதம் மொழிந்த பலராமனுடைய வார்த்தைகள் ஸபாமண்டபத்தின் சுவரில் எதிரொலித்தபொழுது, சுவரில் எழுதப்பட்

டிருக்கும் தேவதைகள் பலராமனுக்குப் பயந்து ஆமோதித்தது போன்றிருந்தன.

இவ்வார்த்தையைக் கேட்ட கண்ணன் ப்ருகஸ்பதியின் சிஷ்யரான உத்தவரைப் பேசும்படி கண்களால் ஜாடைசெய்ததும் உத்தவர் கிருஷ்ணன் முன்னிலையில் அர்த்தம் தெளிவாயுள்ள வார்த்தையைக் கொஞ்சம் கூடக்கர்வமில்லாமல் சொல்ல ஆரம்பித்தார்.

" இவ்வளவு விஸ்தாரமாய்ப் பலராமன் சொல்லியிருக்கையில் நான் சொல்லவேண்டியது அனுவசியம். ஏனென்றால் ஓர் அபிப்பிராயத்தைக் காகிதத்தில் விஸ்தாரமாக எழுதிய பிறகு மறுபடியும் அதைப் படித்துக்காட்டவேண்டியது தேவையோ. இருந்தாலும் மௌனமாயிருந்தால் ப்ரயோஜனமில்லை. உனக்கு நான். குரு என்ற கௌரவமானது என்னைப் பேசும்படி தூண்டுகிறது ஸ ரி க ம ப த நி ஸ என்கிற எழுத்துக்களைமாத்திரம் வைத்துக்கொண்டு திருப்பித் திருப்பிப் பாடுவதுபோலப் பலராமன் சொன்னதை ஒத்துக்கொண்டு தான் சொல்லப்போகிறேனேயொழிய நானாக ஒன்றும் சொல்லப் போகிறதில்லை. ஸம்பந்தமில்லாமல் வதவதவென்று பேசுவது ப்ரமாதமல்ல. தகுந்த அர்த்தத்துடனும் ஆலோசிக்கப்படும் விஷயத்தையனுஸரித்தும் பேசுவதுதான் ச்ரமம். நன்றாய்ப் பேசத்தெரிந்தவர்கள் நயமாயும் அதிக அர்த்தமுள்ளதாயும், இரு சொல்லலங்காரம் முதலிய சாதுர்யங்களுடன் கூடியதாயும், நானாவிதமாயுள்ள வார்த்தையை, கடைக்காரர்கள் நயமாயும், நெருக்கமாயும், அநேகவிதமான நூல்களுடன் கலந்ததாயும், அழகாயுமுள்ள துணியை விரித்துக் காட்டுவதுபோல் விஸ்தரித்துக் காட்டுகின்றார்கள்.

(கீழ் வாக்கியங்களினால் பலராமர் கோர்வையாய்ச் சொன்னார் என்ற ஸ்துதியும் கோர்வையாய்ச் சொல்லவில்லை என்ற நிந்தையும், விசேஷமாகச் சொன்னார் என்ற ஸ்துதியும் சொல்லவில்லை என்ற நிந்தையும் கிடைக்கின்றன.)

ஏ கிருஷ்ணா, சாஸ்திரக்ஞனான உன்னுடைய முன்னிலையில் நான் தைர்யமாய்ப் பேசுவது நன்றாயில்லை. இருந்தாலும் அடிக்கடி உன்னிடம் பேசிப்பழகிய தைர்யத்தைவைத்துக்கொண்டு பேசுகிறேன்.

கெட்டிக்காரனாயிருப்பவன் ஆலோசனைசெய்யும் சக்தியையும், உத்ஸாஹசக்தியையும் தன்னிடத்தில் ஸம்பாதித்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் அந்த மந்திராலோசனைச் சக்தியும், உத்ஸாக சக்தியும் இனி உண்டாகப்போகிற ப்ரபுசக்திக்குக் காரணங்களாக

ஆகின்றன. இதுகாறும் பலராமன் சொல்லியபடி உத்ஸாஹசக்தி இருக்கவேண்டிய அவசியந்தான். அதோடுகூட ஆலோசனைச்சக்தியும் இருக்கவேண்டிய அவசியம். ஏனென்றால் அதிமேன்மையயிருக்கிற அந்த மந்திராலோசனையாகிற கட்டிலில் எவர்கள் உட்கார்ந்து காரியங்களை நடத்துகின்றார்களோ அவர்கள் ஒருபொழுதும் அபஜயத்தை யடைகிறதில்லை. மந்திராலோசனைசெய்யும் புத்தியால் ப்ரயோஜனம் என்னவென்றால்:—அதி கூர்மையாயுள்ள பாணமானது வெளியில் கொஞ்சக்காயத்தை மாத்திரம் உண்டுபண்ணினபோதிலும் உள்ளே நுழைந்து பிராணனைப் போக்கக்கூடிய பெரியகாயத்தைச் செய்கிறது. பெரியகல்லானது காயத்தைப் பெரியதாக உண்டுபண்ணினபோதிலும் உட்புகுந்து ஒன்றும் செய்கிறதில்லை. ஆகையால் கூர்மையான புத்தியுடையவன் கொஞ்சமாகக் காரியத்தையாரம்பித்தாலும் அதிகமாய்ச் செய்கிறான். மந்தனாயிருப்பவன் மலைகெல்லி எலிபிடிப்பதுபோல அற்ப காரியத்தை ப்ரமாதப்படுத்துகிறான். ஒன்றும் தெரியாதவர்கள் அற்ப காரியத்தை யாரம்பித்தாலும் அதிக வருத்தப்படுகிறார்கள். கெட்டிக்காரர்களோ பெரிய காரியங்களை யாரம்பித்தபோதிலும் விசாரமில்லாமலிருக்கிறார்கள். ஆனால் உபாயத்தையறிந்தவனாயிருந்தாலும் அலக்ஷியமாயிருப்பானேயாகில் அவனுடைய காரியங்கள் நடைபெறமாட்டா. எப்படியென்றால், ஓர் வேடன் மிருகங்களின் பக்கத்திலிருந்தபோதிலும் அலக்ஷியமாய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அம்மிருகங்களைக் கொல்லமுடியுமோ?

"உத்ஸாஹ சக்தியால் ஏற்படும் ப்ரயோஜனம் என்னவென்றால்:- சூர்யன் எப்படித் தான் வ்ருத்தியடையவேண்டுமென்ற உத்ஸாஹத்தை வைத்துக்கொண்டே பன்னிரண்டு மாதங்களுக்கும் பன்னிரண்டு சூர்யனாகத் தானொருவனே ப்ரகாசிக்கிறானோ அப்படியே மற்ற எல்லா அரசர்களுக்குள் தான் ஒருவனே ஜயமடையவேண்டுமென்று விருப்பங்கொண்ட ராஜனொருவனே வ்ருத்தியடைகிறான்."

" தன் புத்தியையே தனக்குப் பாணமாகவும் ராஜாங்கத்தையே தனக்குச் சரீரமாகவும், ரகஸ்யமாய் ஆலோசிக்கும் தன்மையையே தனக்குக் கவசமாகவும், தன் ஆப்தர்களான ஸ்நேகிதர்களையே தனக்குக் கண்களாகவும், தூதர்களையே வாயாகவுமுடைய புருஷன்தான் ராஜனேயொழிய மற்றவர்களெல்லாம் ராஜர்களல்ல. பலராமன் சொன்னபடி 'யுத்தத்தில் வெல்லத் தகுந்தவனை யுத்தத்தில்தான் வெல்லவேண்டும். சாந்தமாயிருத்தல் தகாது. பராக்ரமம் வேண்டும்' என்பதும் ஒரு காரணந்தான். [தொடரும்.]

S. Parthasarathy, Srirangam.

நிகழும் காலயுக்தி௵ தைமீ ௩-௪-௫உ களில் (16-17-18 January 1919.) லோயர் பர்மா சைலா நகரின் நாட்டுக்கோட்டை நகரத் தெண்டாயுதபாணியின தைப்பூசத் திருவிழாவின் கொண்டாட்டம் மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

பூசத்தின் விசேஷதினம் முன் வருடங்களைப்பார்க்கிலும் மிகவும் ஆடம்பரமாகவும் ஆசாரமாகவும் சிறப்பாகவும் நடந்தேறின. அன்றையத்தினம் ஸ்ரீ சிவசுப்பிரமணியருக்கு அபிஷேக ஆராதனைகளும் தூப தீப அலங்காரங்களும் வெகு உன்னதமாய் நடத்தப்பெற்றன. சைலாவைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து தமிழர்கள் ஆயிரக்கணக்காக வந்து சுவாமிதரிசனம் செய்தார்கள். மற்றும் டேரியா, மோல்மென்ஜாஜின், சோசான், செய்காமின் நகரத்தார்களும் விஜயஞ்செய்து ஸ்ரீ சிவசுப்பிரமணியரைத் தரிசித்து விபூதி பிரசாதம் பற்றும் பேரானந்தமடைந்தார்கள். எம்பிரானது மஹோற்சவத்தைக் கண்டு களிக்கும்பொருட்டு வந்திருந்த சுமார் (5000) அடியார்களுக்கு மூன்று தினங்களிலும் அறுசுவையோடு உண்டியளிக்கப்பெற்றது.

தைமீ ௩உ காலை ௬-மணிக்கு ஸ்ரீசிவசுப்பிரமணியர் வள்ளி தெய்வயானையுடன் முத்துக்களாலலங்கரிக்கப்பெற்ற வெள்ளி மயில் வாகனத்தின்பேரில் வீற்றிருந்து விமரிசையாய் அலங்கரித்து வைத்திருந்த ரதத்தில் எழுந்தருளி வெள்ளித் தண்டை சிலம்புகளும் பட்டாடைகளுமணிந்த இரண்டு ரிஷபங்கள் அவருடைய ஒப்பற்ற பிரசன்னத்துடன் இரதத்தை இழுத்துக்கொண்டு பட்டணப்பிரவேசம் வரும்பொழுது நகரத்தார்களுடைய இங்கிலீஷ்ப் பள்ளிக்கூடத்து மாணாக்கர்கள் அவருடைய உல்லாச ரதத்தின் பின்னால் சிவநாமாவளி பஜனைகளும் தேவாரங்களும் கீர்த்தனைகளும் திருப்புகழும் ஹார்மோனியத்துடன் பாடிவந்த இன்பரஸமாகிய மதுரம் எம்பிரான் மனதையும் அங்குவந்து விஜயஞ்செய்தவர்கள் மனதையும் களிக்கச்செய்தது.

அன்று மாலை ௪-மணி முதல் ௮-மணி வரையிலும் அடுக்கர்ட்கள் தண்ணீர்ப்பந்தலில் ஷை மாணாக்கர்கள் உபந்நியாசங்களையும் ஹார்மோனியம் பாட்டுக்கச்சேரியையும் சபையோர்கள் ஆனந்தமடையுமாறு வெகு இன்பகரமாய் நடத்தியும் பாடியும் காண்பித்தார்கள்.

௪உ பூசம்மாலை ௪-மணியிலிருந்து ௮-மணி வரையிலும் ஸ்ரீ சிவசுப்பிரமணியரது சந்நிதானத்தில ஷை மாணாக்கர்கள் ஸ்ரீ ராமபிரானது திருவிளையாடலாகிய ராமாயணத்தில இலங்காதகன

மென்ற ஓர் பாகத்தை, கிரிமினல் கேஸ் ரூபமாகவும் சமயோசித மான பாட்டுக்களுடனும் செஷன் கோர்ட்டு (தேவலோகம்) தேவ ராஜ ஐயரவர்கள் முன்னிலையில் இராவணன் ஹநுமார் பேரில் செய்த கிரிமினல் கேஸ் விசாரணைகளும் கோர்ட்டார் இராவண னுக்கு அநுகூலமாகச் செய்த தீர்மானமும் அங்கு விஜயம் செய்த வர்களின் மனதைப் பிரமிக்கச்செய்துவிட்டன. அப்பால் ஹநுமார் ஹைகோர்ட்டு (தேவலோகம்) நீலகண்டய்யரவர்கள் முன்னிலையில் அப்பீல்செய்து லாயர்மார்கள் அக்கோர்ட்டில் பேசிய ஆர்க்கு மெண்டும் அக்கோர்ட்டார் தீர்மானமும் ஹநுமாருக்கு அநுகூலமா யிருந்ததைக்கண்டு சபையோர்கள் அடைந்த ஆனந்தத்தக்கு அள வேயில்லையென்று சொல்லலாம். கண்டு களித்தோன்.

அபிராமம் வித்தியா பாஸ்கர செந்தமிழ்ச் சங்கம்.

இருபெரும் செல்வமும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற வள்ளலும் மதுரை நான்காம் தமிழ்ச்சங்க ஸ்தாபனகர்த்தாவும் ஆகிய காலஞ்சென்ற இராமநாத புரம் மகாராஜா மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் பாஸ்கரசேதுபதியவர்களின் ஞாப கார்த்தமாக இவ்வூரில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாக்கொண்டாட்டமானது ஈனது ஜனவரிமீ 11, 12, 13, தேதி களில் அபிராமம் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் சந்நிதியில் அமைத்திருந்த கொட் டகையில் மிகுந்த சிறப்புடன் நடைபெற்றது.

உள்ளூரினின்றும் பிறவூரினின்றும் பல பிரபுக்களும் வித்வான்களும் வந்து கூடினார்கள். இக்கொண்டாட்டத்திற்கு அக்கிராசனராக வந்த திருவா வடுதுறைஆதின வித்துவானும் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோத கரும் ஆகிய ஸ்ரீமான் சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்களை இச்சங்கத்தார் கள் வாத்தியவைபவங்களுடன் எதிர்சென்று அழைத்துவர மதுரை அமெரிக் கன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும் இச்சங்கத்தின் சிரேஷ்ட அக்கிராச னாதிபதியும் ஆகிய மகா-ா-ா-ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்கள் ஷெ கவிராய ரவர்களைச் சபாநாயகராக வீற்றிருக்க வேண்டிக்கொள்ள, சபையார் கரகோஷத் துடன் அங்கீகரித்தார்கள்.

அக்கிராசனர் ஆசனத்தமர்ந்தபின் ஷெ கார்மேகக்கோனாரவர்கள் செய்யுள் வடிவமான வரவேற்புப்பத்திரம் ஒன்று அக்கிராசனர் அவர்களுக்கு வாசித்துக் கொடுத்தார்கள்.

ஸ்ரீ நா. சு. தண்டியப்பஞசாரி அவர்களாலும் சீனிவாசன் என்ற மாணவனாலும் கடவுள் வாழ்த்துப்பாடப்பெற்றது. அவைத்தலைவரின் முன்னுரையானபின் சங்கத்தின் காரியதரிசி மகா-ா-ா-ஸ்ரீ D. நாகலிங்கம்பிள்ளையவர்களால் சங்கத்தின் சென்ற ஆண்டின் அறிக்கைப்பத்திரம் வாசித்துச் சபையார்களுக்கு வழங்கப்பட்டது.

பின்பு மதுரை த்தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்களும் மதுரைத் திராவிட வித்தியா சங்கத்தலைவர் மகா-ா-ா-ஸ்ரீ பா. வியாச்சாமி ஐயர் B. A., அவர்களும் முறையே "அறிவுடைமை" "அருளுடைமை" என்றவிஷயங்களைச் சபையார்கேட்டின்புறுமாறு பலமேற்கோள்களுடன் பிரசங்கஞ் செய்தார்கள் பின்பு இராமநாதபுரம் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ ப. சிவசாமிசேர்வைகாரரவர்கள் கல்வியிற்பெரிய கம்பரின் சரிதையையும் அவர் வாக்கு வளத்தையும்பற்றி இனிமையாக ஒரு பிரசங்கம் புரிந்தார்கள். பின்பு தமிழ்ப்பண்டிட் மகா-ா-ா-ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்கள் "தாய்மொழிப்பயிற்சி" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு நம் தமிழ்ப் பாஷைக்குச் சர்வகலாசங்கத்தார் செய்யவேண்டிய கடமையையும் ராஜாங்கத்தார் நம் பாஷைக்குச் செய்கின்ற உதவியுடன் நாம் செய்யவேண்டிய உதவியையும் பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்கள். அன்று மாலை 3-மணி முதல் இரவு 9-மணி வரை மேற்கண்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மறுநாட்காலை மீண்டும் 8-மணிக்குச் சபை கூடிற்று. அவ்வமயம் அபிராமம் ஸ்ரீ நடராஜத்தேவரவர்களால் "நட்பு" என்ற விஷயமும் சங்கக்காரியதரிசி ஸ்ரீ D. நாகலிங்கம்பிள்ளையவர்களால் "இல்லறவொழுக்கம்" என்ற விஷயமும் இராமநாதபுரம் ஸ்ரீ ஆ. நாகலிங்கம்பிள்ளையவர்களால் "பழியஞ்சின் திருவிளையாடலும்" மதுரை ஸ்ரீ கலியாணசுந்தரமையரவர்களால் "சகோதரத்துவம்" என்ற விஷயமும் பிரசங்கிக்கப்பட்டன.

மாலை 3-மணிக்கு மறுபடியும் சபைகூடியது. அச்சமயம் ஸ்ரீ பொன்னுச்சாமி ஆசாரியவர்களால் "தர்மம்" என்ற விஷயமும் ஸ்ரீமான் ஜனாப் D. K. முகம்மதுயாசிம் அவர்களால் "கல்வி" என்ற விஷயமும் வெகு இனிமையாகப் பிரசங்கிக்கப்பட்டன. பின்பு மதுரை செட்டில்மெண்டு ஆபீஸ் ஹெட்மாஸ்டர் மகா-ா-ா-ஸ்ரீ காந்திமதிநாதபிள்ளையவர்கள் "பெண்கல்வி" என்ற விஷயமாய் மிகுந்த உருக்கத்துடன் பிரசங்கம் புரிந்தார்கள். பின்பு மதுரை 7-வது சர்க்கிள் கலாசாலைகளின் இன்ஸ்பெக்டரின் பெர்ஸனல் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் வே. முத்துஸ்வாமிஅய்யர் M. A., L. T. அவர்கள் "தமிழ்நாடு" என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டு தமிழ் நாட்டின்

எல்லையையும் செந்தமிழ் நாட்டின் எல்லையையும் செந்தமிழ் நாட்டின் பலவகை அமைப்புகளையும் பற்றிக் கரும்பலகையில் பலவித விளக்கக்குறிப்புகள் வரைந்துகாட்டி, பலசங்க நூல் ஆராய்ச்சியுடன் சபையோர் மகிழுமாறு நீண்டதோர் பிரசங்கம் செய்தார்கள். பின்பு ஸ்ரீ ப. மு. வேலுப்பிள்ளையவர்கள் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற விஷயத்தைப் பிரசங்கம் செய்தார்கள். பின்பு மகா-ள-ள-ஸ்ரீ ப. ரா. ஐயாச்சாமி அய்யர் B.A., அவர்கள் "ஈச்வரசந்திர வித்தியாசாகரர்" என்னும் பெரியோர் சரிதையைப் பலவித நயத்துடன் பிரசங்கித்துச் சபையாரை மகிழ்வித்தார்கள்.

அதன்பின் ஸ்ரீ வே. முத்தச்சாமி அய்யர் M.A., L.T., அவர்களும் ஸ்ரீ சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்களும் ஸ்ரீ காந்திமதிநாதபிள்ளையவர்களும் ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்களும் தனித்தனியே செய்த மங்கள வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டன.

மூன்றாம்நாள் மாலை 3-மணிக்கு மறுபடியும் கொண்டாட்ட நிகழ்ச்சி ஆரம்பித்தது. அப்போது மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை மாணவர் ஸ்ரீ சடகோப ரெட்டியாரால் "கொல்லாமை" என்ற விஷயம் உபந்நியசிக்கப்பட்டது. அபிராமம் வாலிபர்களால் "இஷ்டமே கஷ்டம்" என்ற கதை சம்பாஷணை ரூபமாக ஜனங்கள் ஆனந்திக்குமாறு நடத்தப்பட்டது. பின்பு தமிழ்ப் பண்டிட் ஸ்ரீ சிதம்பரபுன்னைவனநாத முதலியாரவர்கள் தம் மொழிபெயர்த்த "மைத்திரேயி சம்பாஷணை"யை யாவரும் மகிழுமாறு வாசித்தார்கள். பின்பு ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்கள் "வாய்மை" என்ற விஷயம் பிரசங்கித்தார்கள். பின்பு சபாநாயகரவர்கள் தாம் எழுதியுள்ள "கடவுள் உண்மை" என்ற அரியபெரிய வியாசத்தை யாவரும் அதிக உற்சாகத்துடன் கேட்டு மகிழும்படி இனிமையாகப்படித்து வியாக்யானம் செய்தார்கள். (இவ்வியாசம் இச்சங்கத்தாரால் அச்சுப்பிரதி ரூபமாக வெளிப்படுத்தப்படும்.)

பின்பு சபாநாயகரவர்கள் சங்கத்தைப்பற்றிய தமது அபிப்பிராயங்களைக் கூறிய அளவில் சங்ககாரியதரிசி அவர்கள் சபாநாயகருக்கும் விஜயம் செய்தோர்க்கும் வந்தனோபசாரம் சொல்லவும் சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் அளிக்கவும் அரசவாழ்த்து மங்கலவாழ்த்துக்கூறவும் சுமார் 8½-மணிக்கு இச்சங்கத்தின் மூன்றாம் வருடக்கொண்டாட்டம் இறைவனருளால் இனிது பூரணமாயிற்று. சுபம்.

வித்யாபாஸ்கர செந்தமிழ்ச்சங்கம், அபிராமம். } D. நாகலிங்கம் பிள்ளை, காரியதரிசி.